# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2020 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 07 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2020.02.10 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத்***
**திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் அவர்களால்*
*பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 17.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் முதன்மைச் சட்டவாக்கம் எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச்சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, மொத்த விற்பனை மற்றும் சில்லறை விற்பனைமீது சேர்பெறுமதி வரிப் பொறுப்புக்கான தொகையை அதிகரிப்பதாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, சேர்பெறுமதி வரிப்பொறுப்புக்கான பதிவு வரம்பெல்லையை ஒரு காலாண்டுக்காக எழுபத்தைந்து மில்லியன் ரூபாவாகவும் ஆண்டொன்றுக்கு முந்நூறு மில்லியன் ரூபாவாகவும் அதிகரிப்பதாகும் என்பதுடன் அது தொடர்பான விளைவாந்தன்மையினவான மாற்றங்களையும் செய்வதாகும்.

***வாசகம் 4*** : இவ்வாசகம் முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவில் விவரிக்கப்பட்டவாறான ஆட்களுக்காக, இச்சட்டத்தின்கீழான தன்னிச்சையான பதிவுக்கு ஏற்பாடுசெய்வதாகும்.

***வாசகம் 5*** : இவ்வாசகம், கூட்டாட்சி வீடமைப்புக்கூறுகள் மற்றும் தகவல் தொழினுட்பவியல் அத்துடன் இயன்றனவாக்கப்பட்ட சேவைகள் என்பவற்றின் வழங்குகையின்மீது விதிக்கப்பட்ட சேர்பெறுமதி வரியை விலக்களிப்பதற்கென முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையின் பாகம் II ஐ திருத்துவதாகும்.

ச.வ.ஓ. 60/2019

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்.

**1**. இச்சட்டம், 2020 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**2**. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, (1) ஆம் உட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (iv) ஆம் உட்பந்தியில், "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்றும் அதன்பின்னரும் தொடங்குகின்ற ஆனால் 2019, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்ற" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்; அத்துடன்";

(2) (iv) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(v) 2020, சனவரி 1 ஆந் தேதியன்றும் அதன் பின்னரும் தொடங்குகின்ற மூன்று மாதங்களைக் கொண்ட அத்தகைய ஏதேனும் காலப்பகுதிக்கு எழுபத்தைந்து மில்லியன் ரூபாவுக்கு,";

முதன்மைச் சட்டவாக்கத்தின் 10ஆம் பிரிவைத் திருத்துதல்.

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் –

(அ) (v) ஆம் பந்தியில், “2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதற்குப்பின்னர்” என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “2016, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்றும் அதற்குப்பின்னரும், ஆனால் 2020, சனவரி 1 ஆந் தேதிக்குமுன்னர்” என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) (v) ஆம் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

“(vi) 2020, சனவரி 1 ஆந் தேதியன்றும் அதற்குப் பின்னரும் இலங்கையில் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்ற அல்லது நிறைவேற்றுகின்ற ஆள் ஒவ்வொருவரும் –

(அ) விடயத்திற்கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக் கொண்ட ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதியின் முடிவில், விடயத்திற் கேற்ப, ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக்கொண்ட அந்த வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியில் இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப் படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி எழுபத்தைந்து மில்லியன் ரூபாவாகவிருப்பின்; அல்லது

(ஆ) அப்போது முடிவடைகின்ற பன்னிரெண்டு மாத காலப் பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப் படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சியிருப்பின்; அல்லது

(இ) விடயத்திற்கேற்ப, அடுத்துவரும் ஒரு மாதத்தை அல்லது மூன்று மாதங்களைக்கொண்ட வரி விதிக்கப்படற்பாலதான காலப் பகுதியில், இலங்கையில் செய்யப்பட்ட அத்தகைய ஆளின் பண்டங்களின் அல்லது சேவைகளின் அல்லது பண்டங்களினதும் சேவைகளினதும் வரிவிதிக்கப் படற்பாலனவான வழங்குகைகளின் மொத்தப் பெறுமதி எழுபத்தைந்து மில்லியன் ரூபாவை விஞ்சக் கூடுமென அல்லது அடுத்துவரும் பன்னிரெண்டு மாத காலப் பகுதியில் முந்நூறு மில்லியன் ரூபாவை விஞ்சக்கூடுமென நம்புவதற்கு எந்நேரத்திலும் நியாயமான ஏதுக்கள் இருப்பின்,

இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுதல் வேண்டும்.".

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் -

(அ) (இ) என்னும் உட்பந்தியில், "2016, நவெம்பர் 1 ஆந் திகதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதிக்கு; அத்துடன்"

என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016, நவெம்பர் 1 ஆந் திகதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்ற காலப்பகுதிக்கு;" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஆ) (ஈ) என்னும் உட்பந்தியில், "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதியினுள் அடங்குகின்ற மூன்று மாதங்களைக்கொண்ட அத்தகைய ஏதேனும் காலப்பகுதிக்குப் பன்னிரெண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின்;" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்றும் அதன்பின்னரும் தொடங்குகின்றதும் ஆனால், 2019, திசெம்பர் 31 ஆந் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடைகின்றதுமான ஏதேனும் காலப்பகுதியினுள் அடங்குகின்ற மூன்று மாதங்களைக்கொண்ட அத்தகைய ஏதேனும் காலப்பகுதிக்குப் பன்னிரெண்டு மில்லியன் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சியிருப்பின்; அத்துடன்;"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(இ) அப்பிரிவின் (ஈ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும்:-

"(உ) 2020, சனவரி 1 ஆந் தேதியன்றும் அதன்பின்னரும் தொடங்குகின்ற அத்தகைய ஏதேனும் காலப்பகுதிக்காக, எழுபத்தைந்து மில்லியன் ரூபா.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 12 ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

“தன்னிச்சையான பதிவு.

12. மூன்றாம் அத்துடன் 10 ஆம் பிரிவுகளின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், பண்டங்களை அல்லது சேவைகளை வழங்குகின்றவரும் ஒரு வரிவிதிக்கப்படற்பாலதான செயற்பாட்டைக் கொண்டுநடாத்துகின்றவரும் அல்லது எவையேனும் வரிவிதிக்கப்படற்பாலனவான பண்டங்களை இறக்குமதி செய்கின்றவருமான எவரேனுமாள், பின்வரும் வரிவிதிக்கப்படற்பாலனவான காலப்பகுதிகளுக்காக இச்சட்டத்தின் கீழான பதிவுக்கான, குறித்துரைக்கப்பட்ட படிவத்திலான விண்ணப்பமொன்றை ஆணையாளர் தலைமையதிபதிக்குச் செய்யலாம்:-

(அ) 2013, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக:

ஆயின், எவ்வாறாயினும், ஆணையாளர் தலைமையதிபதி, கேட்கப்படுவதற்கான வாய்ப்பொன்றை விண்ணப்பகாரருக்கு அளித்தபின்னரும், அத்தகைய விண்ணப்பகாரரினால் கொண்டுநடாத்தப்படும் தொழிலின் தன்மையையும், முற்போந்த இரு வரிவிதிக்கப்படற்பாலனவான காலப் பகுதிகளில் அத்தகைய விண்ணப்பகாரரினால் செய்யப்பட்ட வரிவிதிக்கப் படற்பாலனவான வழங்கல்களின் பெறுமதியையும் மற்றும் அவரது வரிவிதிக்கப்படற்பாலனவான வழங்கல்களின் பெறுமதி 10 ஆம் பிரிவிற் குறிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியை விஞ்சமாட்டாதென்ற நிகழ்தகவையும் கருத்திற்கொண்டும், அத்தகைய விண்ணப்பகாரரைப் பதிவுசெய்வதற்கு மறுக்கலாம்; அத்துடன்

(ஆ) 2020, சனவரி 1 ஆந் தேதியன்றும் அதன் பின்னரும் தொடங்குகின்ற ஏதேனும் வரி விதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்காக,".

முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை யானது பாகம் II இல் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) (ஆ) என்னும் பந்தியின் (xi) ஆம் விடயத்தின் (இ) என்னும் உபவிடயத்தில், "2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்றும் அதன்பின்னரும் தொடங்கி ஆனால் 2019, திசெம்பர் 1 ஆந் தேதியின் முடிவில்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(2) (இ) என்னும் உபவிடயத்தை உடனடுத்துப் பின்வரும் புதிய உபவிடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(ஈ) வதிவிட வசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர, எவரேனுமாளினால், 2019, திசெம்பர் 1 ஆந் தேதி தொடங்கப்படுகின்ற விடத்து.";

(3) (2018 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டத்தினால் உட்புகுத்தப்பட்டவாறான) (Li) மற்றும் (Lii) என்னும் விடயங்களை முறையே (Lii) மற்றும் (Liii) என்னும் விடயங்களாக மீள இலக்கமிடுவதன் மூலமும்;

(4) மீள இலக்கமிடப்பட்ட (Liii) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(Liv) 2020, சனவரி 1 ஆந் தேதி தொடங்கி, தகவல் தொழினுட்பவியல் மற்றும் விதித்துரைக்கப்படக் கூடியவாறாக இயன்றளவாக்கப்பட்ட சேவைகள்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**6**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கு இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.